# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 1 - 2020

## இந்துசமயம் I

சுட்டெண் : ...............          நேரம் : 2.00 மணித்தியாலம்

### பகுதி-I

எல்லாவினாக்களுக்கும் விடை தருக.

❖ 01 தொடக்கம் 05 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவது ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. அப் பொருந்தாததைத் தெரிவு செய்க.

1) 1.பிள்ளையார் 2.கணபதி 3.சிவன் 4.கணேசன் 5.விநாயகர்

2) 1.வாரம் 2.யோகம் 3.கரணம் 4.நட்சத்திரம் 5.அயனம்

3) 1.தத்புருசமுகம் 2.சிங்கமுகம் 3.வாமதேவமுகம் 4.அகோரமுகம் 5.அதோமுகம்

4) 1.சைவதூசணபரிகாரம் 2.பாலபாடம் 3.சைவவினாவிடை 4.தேவாரம்வேதசாரம் 5.பெரியபுராணவசனம்

5) 1.சிட்சை 2.கல்பம் 3.சங்கிதை 4.சோதிடம் 5.நிருக்தம்

❖ 06 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச்சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லை தெரிவு செய்க.

6) 1.மரபுவழிச்சாதனம் -ஓலைச்சுவடிகள்
2.விபுலானந்தர் -கணேசதோத்திரபஞ்சகம்
3.சம்பந்தர் -திருக்கேதீச்சரப்பதிகம்
4.நம்மாழ்வார் -திருவாய்மொழி
5.மாணிக்கவாசகர் -திருப்பல்லாண்டு

7) 1.பெரியகவி -சமுத்திரகுப்தன்
2.குணபரன் -மகேந்திரவர்மன்
3.சிவசூடாமணி -இராஜசிம்மன்
4.சங்கரபக்தன் -இராஜராஜன்
5.வித்யாவிநீதன் -பரமேஸ்வர்மன்

8) 1.சங்கரர் -கேவலாத்துவைதம்
2.இராமானுஜர் -விசிட்டாத்வைதம்
3.மத்துவர் -துவைதம்
4.பதஞ்சலி -யோகம்
5.மெய்கண்டார் -சாங்கியம்

9) 1.இராஜசிம்மன் -பெரியகற்றளி
2.மாமல்லன் -சிற்பக்கலைக்களஞ்சியம்
3.பசுபதிச்செட்டியார் -வண்ணைவைத்தீஸ்வரன்
4.மகேந்திரவர்மன் -பெருவுடையார்கோயில்
5.கிருஷ்ணதேவராயர் -விருபாட்சகர்கோயில்

10) 1.வாகீசர் -ஞானமிர்தம்
2.மனவாசகம்கடந்ததேவர் -உண்மைவிளக்கம்
3.மெய்கண்டதேவர் -சிவஞானபோதம்
4.உமாபதிசிவாச்சரியார் -இருபாஇருப∴து
5.மாணிக்கவாசகர் -திருவாசகம்

❖ பதினொன்று தொடக்கம் பதினைந்து வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் அ, ஆ எனும் நிரல்களின்கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. ‘அ’ நிரலுக்கு ஏற்ப ‘ஆ’ நிரலை பொருத்தமாக ஒழுங்குபடுத்திய சேர்மானத்தை தெரிவு செய்க.

| | அ | ஆ |
|---|---|---|
| 11) | 1.முகம் | A.சூரியரூபம் |
| | 2.கண் | B.பிரம்மரூபம் |
| | 3.வலப்பாகம் | C.விஷ்ணு |
| | 4.இடப்பாகம் | D.சிவரூபம் |
| | 5.நாபி | E.சக்திரூபம் |

1.ADCEB 2.BCDAE 3.CDAEB 4.CDBEA 5.EDCAB

| | | |
|---|---|---|
| 12) | 1.தூலபஞ்சாட்சரம் | A.விபூதி,உருத்திராக்கம் |
| | 2.யோகம் | B.சைவசித்தாந்தமுத்தி |
| | 3.புறச்சிவசின்னம் | C.அஞ்ஞானம் நீக்கி ஞானம் தருவது |
| | 4.தாடலை | D.நமசிவாய |
| | 5.தீட்சை | E.காய் |

1.DEABC 2.DACBE 3.ADBCE 4.DCEAB 5.EADBC

| | | |
|---|---|---|
| 13) | 1.திருக்களிற்றுப்படியார் | A.மிகக்குறைந்த பாடல் எண்ணிக்கை கொண்ட நூல் |
| | 2.உண்மைவிளக்கம் | B.நூறு குறள் வெண்பாக்கள் கொண்ட நூல் |
| | 3.கொடிக்கவி | C.பன்னிரு சூத்திரங்கள் கொண்ட நூல் |
| | 4.திருவருட்பயன் | D.வினாவிடை அமைப்பில் 53பாடல்கள் கொண்டநூல் |
| | 5.சிவஞானபோதம் | E.நூறு வெண்பாக்கள் கொண்டநூல் |

1.ACEBD 2.EACBD 3.DEBCA 4.EDABC 5.DAEBC

| | | |
|---|---|---|
| 14) | 1.பத்திரலிங்கம் | A.கொடிச்சீலை |
| | 2.பதி | B.தர்ப்பைக்கயிறு |
| | 3.பசு | C.பக்குவப்பட்ட ஆன்மா |
| | 4.பாசம் | D.மஞ்சட்கயிறு |
| | 5.திருவருட்சக்தி | E.கொடிமரம் |

1.EDABC 2.CEABD 3.CEDAB 4.BEACD 5.EABDC

15) 1.ஈதல் — A.இருக்குவேதம்
2.ரிதஷ்யகோபா — B.சதருத்திரியம்
3.தேவதூதன் — C.அக்னி
4.கௌஷிதகியபிராமணம் — D.வருணன்
5.சுக்கிலயசுர் — E.அந்தணர்
1.CDEAB 2.DECBA 3.EDCAB 4.EDABC 5.DEABC

❖ 16 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் கீழே தரப்பட்டுள்ள மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16) கரகம் என்பதற்கு வழங்கப்படும் மற்றொரு பெயர்
1.பூம்பந்தல் 2.காவடி 3.அடுக்கு 4.கொம்புமுறி 5.வசந்தன்கூத்து

17) கல்வெட்டுக்களில் உள்ள ''ஸ்வஸ்திஸ்ரீ'' என்பது
1.கீர்த்திஉண்டாகுக. 2.நீடூழிவாழ்க. 3.மங்களமுண்டாகுக. 4.இனம்பெருகுக. 5.அமைதிபெறுக.

18) புருடன், பிரகிருதி எனும் இரு பதார்த்த விளக்கமுடைய தத்துவகொள்கையும் அதன் ஆசிரியரும்
1.சாங்கியம்-கபிலர் 2.சாங்கியம்-பதஞ்சலி 3.யோகம்-பதஞ்சலி 4.ஸ்ரீபாஷ்யம்-கபிலர் 5.ஸ்ரீபாஷ்யம்-இராமானுயர்

19) உயிர்களுக்கு தெய்வம் காரணமாக வரும் கன்மம்
1.ஆதிநவீனம் 2.ஆதிதீவினை 3.ஆதிதெய்வீகம் 4.ஆதிபௌதிகம் 5.ஆதிஆத்மீகம்

20) தீக்காயத்தினால் எரிந்துபோன தோலைக் குணப்படுத்தி முன்பு இருந்ததுபோல் செய்யும் மூலிகை வைத்தியமுறை
1.ம்ருத்சஞ்சீவினி 2.விசல்கரணி 3.ஸந்தானகரணி 4.ஸாவர்ணயகரணி 5.விருஷகரணி

21) கி.பி 6ம்நூற்றாண்டில் உஜ்ஜனியில் வாழ்ந்து வானியலாளராகவும், சோதிடவல்லவரகவும் விளங்கியவர்
1.ஆரியபட்டர் 2.வராகமிகிரர் 3.பைதாமகர் 4.பிரம்மகுப்தர் 5.புளிசர்

22) ஐப்பசி மாத வளர்பிறை பிரதமைமுதல் ஷஷ்டி ஈறாக அனுட்டிக்கப்படும் விரதம்
1.சிவரத்திரிவிரதம் 2.நவராத்திரிவிரதம் 3.விநாயகசதுர்த்திவிரதம்
4.கந்தஷஷ்டிவிரதம் 5.பிரதோஷவிரதம்

23) உபநிடதங்கள் சித்தரிக்கும் அறப்பண்புகள் அல்லாதது
1.சத்யம்வத 2.தர்மம்சர 3.மாத்ருதேவோபவ 4.குருதேவோபவ 5.தத்துவமஸி

24) இலங்கையில் கண்ணகி வழிபாட்டை ஆரம்பித்த மன்னன்
1.கஜபாகு 2.விக்ரமபாகு 3.விஜயபாகு 4.கோவலன் 5.விஜயன்

25) தாஸ்யபாவநிலைக்குரிய பக்தர்
1.அருச்சுனன் 2.கிருஷ்ணன் 3.தொண்டரடிப்பொடியாழ்வார் 4.பெரியாழ்வார் 5.பிரகலாதன்

26) பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்டநிலை, படைப்பின் மூலாதாரம் என்பன பற்றி இருக்கு வேதசூக்தம்
1.ராஜயோகசூக்தம் 2.யமசூக்தம் 3.நாஸதீயசூக்தம் 4.முனிசூக்தம் 5.வருணசூக்தம்

27) சிந்துவெளிகால சிற்பக்கலை வளர்ச்சி கண்டு 'இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது' எனக்கூறியவர்
1.மைக்ஸ்முல்லர் 2.சேர்.யோன்.மார்சல் 3.ராசமாணிக்கனார்
4.அறிஞர் மைக்கே 5.டாக்டர்.ராதாகிருஸ்ணன்

28) பாகவதநெறிக்கும் இந்துதத்துவ கோட்பாடுகளுக்கும் அடிப்படையான இலக்கியம்
1.வேதம் 2.ஆகமம் 3.மகாபாரதம் 4.இராமாயணம் 5.பகவத்கீதை

29) பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக்கூறும் நூல்
1.தொல்காப்பியம் 2. பரிபாடல் 3.கலித்தொகை 4.திருமுருகாற்றுப்படை 5.புறநானூறு

30) 'யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல்தண்ணுமை….. இசையாகும்' என இசை பற்றி கூறும்நூல்
1.திருக்குறள் 2.சிலப்பதிகாரம் 3.மணிமேகலை 4.ஆசாரக்கோவை 5.திரிகடுகம்

❖ 31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பு, அதன் கீழ் 5 விடயங்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.

31) **திருவாவடுதுறை ஆதீனம்**
1.நாயக்கர் காலத்து எழுந்த ஆதீனங்களில் ஒன்றாகும்.
2.இது இலங்கையிலுள்ள ஒரேஒரு ஆதீனம்
3.நாகபட்டின மாவட்டத்தில் கும்பகோணசாலையில் மயிலாடுதுறையில் அமைந்துள்ளது.
4.திருக்கயிலாய பரம்பரையில் தோன்றிய நமசிவாயமூர்த்திகளால் ஸ்தாபிக்கப்பட்டது
5.இதற்கு 136 கிளைமடங்கள் உள்ளன

32) **தென்மோடிக் கூத்திற்கான ஒப்பனை**
1.ஆண்கள் அரசமுடி(ராஜகிரீடம்)அணிவர்
**2.**உடுப்பு கரப்புடுப்பாக காணப்படும்
**3.**ஒப்பனைகளை வைத்துக்கொண்டு பாத்திரங்கள் அடையாளம் காணப்படும்
4.காலில் சலங்கை கட்டியிருப்பர்
**5.**ஆண்கள் பெண்கள்போல் ஒப்பனை செய்வர்

33) **இரண்டாம் சிவாலயம்**
1.பொலனறுவையில் சோழராட்சிக்காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச்சிறப்பானது.
2.இவ்வாலயம் வானவன்மாதேவீச்சரம் எனஅழைக்கப்படும்
3.இவ்வாலயம் அதிட்டானம் முதல் விமானம் வரையான ஆலயமுழுஅமைப்பும் கொண்டது
4.இவ்வாலய வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாகக் காணப்படுகிறது
5.இவ்வாலய அமைப்பும் தஞ்சை பெருவுடையார் ஆலய அமைப்பும் அழகும் ஒப்பானவை

34) **ஆழ்வார்கள்**
1.விஷ்ணுமீது பக்தி கொண்டோர் ஆழ்வார்களாவர்.
2.திருக்குறுங்குடிப்பெருமாள் அருளால் வைகாசி விசாகத்தில் அவதரித்தவரே ஸ்ரீசடகோபர் ஆவார்.
3. விஷ்ணுவை தனது காதலனாகக் கொண்டு ஆண்டாள் பாடியதே திருப்பல்லாண்டு ஆகும்
4.பன்னிருஆழ்வார்களின் பாடல்தொகுதியே நாலாயிரதிவ்யபிரபந்தமாகும்
5.விசிட்டாத்வைதக்கோட்பாட்டின் தனிச்சிறப்பைக் காட்டும் பாசுரம் திருமொழியாகும்

35) **சைவசித்தாந்தத்தில் ஆணவம்**
1.இருளிலும் கொடியது என பேசப்படுவது
2.ஆன்மாவின் குணமாக நிற்கும்
3.அகந்தைக்கும் மமதைக்கும் காரணமாகும்
4.ஆன்மாவை சிற்றறிவும் சிறுசெயலும் உடையதாக்கும்
5.கற்பம், குரோதம், விகற்பம்.. என எட்டுகுணங்கள் கொண்டது

❖ 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு A தொடக்கம் O வரையான சொற்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A-133 அதிகாரம் | B- கிரிவலம் வருதல் | C- பற்றின்மை | D-ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் | E-முப்பாநூல் |
| F-ஓஷதிசூக்தம் | G-ஒழுக்கமே அறம் | H-அராலி இரமலிங்கமுனிவர் | I-தன்வந்திரி | J-பொறுமை |
| K-விபூதி அணிதல் | L-குருசேவை | M-யோகாசனம் | N-சந்தானதீபிகை | O-சுஸ்ருதசம்ஹிதை |

36) சந்தான விருத்திக்கான சோதிட விடயங்களை மட்டும் கூறும் தொகுதி.
1.A,E,H 2.F,G,I 3.A,H,L 4.D,H,N 5.G,I,N

37) பகவத்கீதை கூறும் ஞானத்தோடு தொடர்புடைய செயல் அடங்கும் தொகுதி.
1.B,G,J 2.C,J,L 3.A,E,O 4.H,I,M 5.O,F,M

38) திருவள்ளுவரின் நூலுடன் தொடர்புடைய தொகுதி.
1.A,E,G 2.D,A,F 3.I,N,K 4.E,H,L 5.L,M,N

39) இந்து வழிபாட்டோடு தொடர்புடைய மருத்துவ செயற்பாட்டின் தொகுதி
1.B,C,G 2.J,K,L 3.I,K,M 4.E,B,M 5.B,K,M

40) இந்துக்களின் மருத்துவத்தோடு தொடர்புடைய தொகுதி
1.D,A,C 2.E,G, 3.F,I,O 4.N,K,M 5.H,O,M

❖ 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் கொண்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்க.

41) **நாட்டியமும் அழகுணர்ச்சியும்**
1.கலைகள் இறைவனின் படைப்பு என்பது நம்பிக்கை
2.கதகளி பரதநாட்டியம் என்பன இந்திய நாட்டிய மரபில் மிகப் பிரதானமானவை
3.கரகாட்டம், காவடி, கும்மி என்பன நாட்டார் கலைகளுள் அடங்கும்
4.இந்து நடனக்கலை மரபு அழகுணர்ச்சியையும் பக்தியையும் தரவல்லது
5.இந்துக்கலைமரபில் தாண்டவ நாட்டியம் முக்கியமற்றது

42) **பக்தியும் சாதனையும்**
1.பக்தி இறைவனை அடைவதற்குரிய ஒரு மார்க்கமாகும்.
2.இருக்குவேதம் இறைசார்ந்த பக்தி இலக்கியமாகும்
3.இதிகாசங்கள் மனிதனின் ஒழுகலாறுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பன
4.புராணங்கள் நல்லொழுக்க நெறிகளைக் கற்பிப்பனவாகும்
5.தேவாரப்பாடல்களும் திருவாசகப்பாடல்களும் பக்திக்கும் முக்திக்கும் உரியதொரு மார்க்கமாகும்.

43) **பஞ்சமுகவிநாயகர்**
1.பஞ்சமுகவிநாயகர் ஐந்து முகங்களைக் குறிக்கும்
2.திருமந்திரத்தில் விநாயகர் பற்றிப் பாடப்பட்டுள்ளது
3.விநாயகரைக் குளிர்விக்க உகந்தது அறுகம்புல் ஆகும்
4.விநாயகருக்கு கொழுக்கட்டை மோதகம் படைத்து வழிபடுவது சிறப்பானதாகும்
5.விநாயகர் மேலான பரமேஸ்வர வடிவத்தை பெற்றுக்கொண்டபோது ஐந்து முகங்களைக் கொண்ட விநாயகவடிவம் பெற்றார்

44) **சைவாகமம்**
1.சிவாகமங்கள் 28உம் சிவனின் ஐந்து திருமுகங்களினின்றும் தோன்றிய இந்துசமய சிறப்பு நூலாகும்
2.இது ஆன்மீக வாழ்வை நெறிப்படுத்துகின்றது
3.திருவுருவங்களை செதுக்கும் கல்லை தெரிவு செய்வது பற்றி சிலாபரீட்சணம் கூறுகிறது
4.சித்தாந்த சிந்தனைகள் பலவற்றைக் கொண்டுள்ளது
5.ஆலய கிரியைமுறை, அமைப்புமுறை என்பவற்றைக் கூறுகின்றது

45) **இந்துசமயத்தின் சிறப்பும் தனித்துவமும்**
1.பரந்த நோக்குடையது
2.சனாதனதர்மமாக விளங்கும் சிறப்புடையது
3.இறை ஆற்றலை விட மானிடஆற்றல் மேலானது எனக்கருதுவது
4.சுயநலம் அற்று பிறநலம் கொண்டது
5.மனிதப்பண்பு மட்டும் கொண்ட சமயமாகும்

46) **சோழஅரசும் சைவநெறியும்**
1.சைவசமயநெறிகள் பலவும் வளர்ச்சி கண்டன
2.கோயில் சேவைகள் பல்கிப்பெருகின
3.உலகமே வியக்கும் தஞ்சைப்பெருங்கோயில் கட்டப்பட்டது
4.இலக்கியங்கள் பல எழுச்சி பெற்றன
5.பரதவிருத்தி, புராணவிருத்தி என்பன ஏற்பட்டன

47) **திருமூலரும் திருமந்திரமும்**
1.இந்நூலில் சைவம் என்ற சொல் முதன்முதல் பயிலப்பட்டது
2.திருமூலர் தர்மபுர ஆதீனத்தை தோற்றுவித்தார்
3.நவநாதசித்தர் மரபுடன் தொடர்புடையவராவர்
4.'ஒன்றே குலம் ஒருவனே தேவன்…'என்ற வாசகம் போற்றப்படுவது
5.இந்துசமயமரபில் வடமொழிச் செல்வாக்கை நிராகரித்து தனித்தமிழ்நோக்கில் இயற்றப்பட்டது

48) **முன்னேஸ்வரம்**
1.மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாக அமைந்தது
2.மன்னர்களால் புனருத்தாரணப் பணிகள் செய்யப்பட்டது
3.சிவராத்திரி விரதம் சிறப்பாக அனுட்டிக்கப்படும் ஆலயம்
4.ஈழத்துப் புராதன சிவாலயங்களுள் ஒன்று
5.கருவறையில் மூலமூர்த்தியுடன் அம்பிகையும் அமையப் பெற்றுள்ளது

49) **மாணிக்கவாசகர்**
1.சமணர்களோடு வாதிட்டவர்
2.காவிரியாறு பெருக்கெடுக்கச் செய்தவர்
3.பாண்டிய மன்னருக்கு அமைச்சரானவர்
4.பெரியபுராணத்தில் சேக்கிழாரால் பாடப்படாதவர்
5.செம்மனச்செல்வியின் இன்னல் தீர்த்தவர்

50) **காவடியும் பக்தியும்**
1.இறைவனை வழிபடுவதற்குரிய வழிபாட்டு முறைகளுள் காவடி ஒன்று
2.காவடி முருகனுக்குப் பிடித்த ஆடற்கலைகளுள் ஒன்று
3ஆன்மீக நாட்டத்தையும் பக்தி வைராக்கியத்தையும் வளர்க்கும் சாதனமாகும்.
4.காவடி வன்பக்தியையும் மென்பக்தியையும் வெளிப்படுத்தும்
5.பால்காவடி, பறவைக்காவடி, புஷ்பக்காவடி…. எனப் பல உண்டு

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 1 - 2020

## இந்துசமயம் I

சுட்டெண் : ……………    நேரம் : 3.00 மணித்தியாலம்

## பகுதி-II

❖ **பகுதி Iஇல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

### பகுதி-I

1) இந்துசமய வளர்ச்சியில் மகாபுராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
அ. புராணம் என்பதன் பொருள்
ஆ. பொருள்மரபு
இ. தத்துவமரபு
ஈ. முக்கியத்துவம்

(2+6+6+6=20)

2) ‘இந்துசமய தத்துவ சிந்தனைக்கு உபநிடதங்கள் மூல ஊற்றுக்களாகும்’ இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
அ. உபநிடதம் என்பதன் பொருள், மறுபெயர்கள்
ஆ. பிரதான உபநிடதங்கள் எட்டின் பெயர்கள்.
இ. உபநிடதங்களில் பிரமம்
ஈ. உபநிடதங்களில் ஆன்மா

(4+4+6+6=20)

3) ‘வேதாந்த தத்துவ வளர்ச்சியில் விசிட்டாத்வைதம் தனித்துவம் மிக்கது’ இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
அ. விசிட்டாத்வைதம் என்பதன் பொருள்
ஆ. விசிட்டாத்வைத கோட்பாட்டின் சிறப்பம்சம்
இ. சங்கரர் கோட்பாடு விசிட்டாத்வைதக் கோட்பாட்டுடன் வேறுபடும் விதம்
ஈ. முத்தி

(5+5+5+5=20 புள்ளி)

### பகுதி-II

4) தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவபக்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.
அ. அரசர்களின் பங்கும் பணியும்
ஆ. நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்
இ. திருக்கோயில் வழிபாடு

(6+7+7=20 புள்ளி)

5) ‘இந்துசமய நெறிகளுள் சாக்தம் தனித்தவமான பண்பாட்டுச் சிறப்பு மிக்கதாகும்’. இக்கூற்றினை மேல்வரும் அடிப்படையில் எழுதுக.
அ. சாக்த வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி
ஆ. சாக்த வழிபாட்டு இலக்கியங்கள்

(10+10=20 புள்ளி)

6) இந்து ஒருவனின் உடல்உள மேம்பாட்டிற்கு யோகதத்துவம் சிறப்பாக துணைபுரியுமாற்றினை ஆராய்க.

(20புள்ளி)

7) ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் திருக்கோணேச்சர ஆலய சிறப்புப்பற்றி கட்டுரை வரைக.

(20புள்ளி)

8) இந்துசமய வளர்ச்சியில் இசைக்கலை, பண்ணிசைக்கலை பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20புள்ளி)

## புள்ளித்திட்டம்
## பகுதி-I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 3 | 11. 3 | 21. 2 | 31. 2 | 41. 4 |
| 2. 5 | 12. 1 | 22. 4 | 32. 3 | 42. 5 |
| 3. 2 | 13. 4 | 23. 5 | 33. 5 | 43. 5 |
| 4. 4 | 14. 2 | 24. 1 | 34. 3 | 44. 1 |
| 5. 3 | 15. 3 | 25. 3 | 35. 2 | 45. 2 |
| 6. 5 | 16. 1 | 26. 3 | 36. 4 | 46. 3 |
| 7. 4 | 17. 3 | 27. 2 | 37. 2 | 47. 4 |
| 8. 5 | 18. 1 | 28. 5 | 38. 1 | 58. 5 |
| 9. 4 | 19. 3 | 29. 4 | 39. 5 | 49. 4 |
| 10. 4 | 20. 4 | 30. 2 | 40. 3 | 50. 3 |

## பகுதி-II

பகுதி-I

1) **இந்துசமய வளர்ச்சியில் மகாபுராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.**
**அ. புராணம் என்பதன் பொருள்**
**ஆ. பொருள்மரபு**
**இ. தத்துவமரபு**
**ஈ. முக்கியத்துவம்**

**அ. புராணம் என்பதன் பொருள்**

- புராதனம், பழைமை , தொன்மை வாய்ந்தது
- 'பூரணாத்புராணம் இதிஉச்சயதே' என்பது முழுமையானதால் புராணம் எனப்பொருள்படும்.

**ஆ. பொருள்மரபு**

- பண்பாடு, சமயம், தத்துவம், கலை, இலக்கியம் வரலாற்றுச் செய்திகள் கூறப்படுகிறது
- தெய்வீகவரலாறு, தெய்வீகபரத்துவம் கூறப்படுகிறது
- பஞ்சலட்சணம், தசலட்சணம் போன்ற மரபுகள்
- சமயநெறிகள், வழிபாட்டு முறைகள் போன்றனவும் மூர்த்தி, தலம், விரதம், தவம், தீர்த்தம், தலயாத்திரை, தோத்திரம் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றன.
- மானுடக்கடமைகள் , ஆச்சிரமதர்மங்கள், புருடார்த்த தர்மநெறிகள், சோதிடம், வானியல், சிற்பம், கலை,….. எனப்பல அறிவியல் சிந்தனைகள் உள்ளன.
- அரசியல், வம்சவரலாறு,…. எனப்பலவும் உள்ளன

**இ. தத்துவமரபு**

- உலகப்படைப்புக்கள் பற்றிய கருத்துக்கள்
- சிவ, விஷ்ணு, சக்தி, முருக பரத்துங்கள்
- பிரமனது உந்திக்கமலத்திலிருந்து உலகம் படைக்கப்பட்டது
- அவதாரதத்துவம்
- தவம், விரதம், தீட்சை போன்ற ஆன்மீக நோக்குடைய தத்துவங்கள்
- சைவசித்தாந்த சிந்தனையுடன் கடவுள் ஆன்மா, பிரபஞ்சம், கர்மவினை, மறுபிறப்பு, ஆன்மீக விடுதலை என்பன உள்ளன

**ஈ. முக்கியத்துவம்**

- புராணங்கள் நண்பர்போல் அறிவுரை வழங்குவன அறநெறி போதனை புரிவது
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும் எளிமைப்படுத்தியும் கூறும் பாங்குடையது
- திருக்கோயில் வழிபாடு திருவுருவ அமைப்பு வழிபாடு பற்றிக்கூறுவது
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது

2) **'இந்துசமய தத்துவ சிந்தனைக்கு உபநிடதங்கள் மூல ஊற்றுக்களாகும்' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக**
**அ. உபநிடதம் என்பதன் பொருள், மறுபெயர்கள்**
**ஆ. பிரதான உபநிடதங்கள் எட்டின் பெயர்கள்.**
**இ. உபநிடதங்களில் பிரமம்**
**ஈ. உபநிடதங்களில் ஆன்மா**

**அ. உபநிடதம் என்பதன் பொருள், மறுபெயர்கள்**

உப+நி+ஷத் எனப் பிரிக்கப்பட்டு குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற உண்மைகளை சிரத்தையுடன் கற்றல் எனப்படும். அதாவது பிரமஞானத்தை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியனின் அடியிலிருந்து மறை பொருட்கோட்பாடுகளை சிரத்தையுடன் கேட்டலாகும்.

மறுபெயர்கள்- வேதசிரசு ,வேதாந்தம்

**ஆ. பிரதான உபநிடதங்கள் எட்டின் பெயர்கள்.**

| | |
|---|---|
| ஈசஉபநிடதம் | பிரசின்னஉபநிடதம் |
| கேனஉபநிடதம் | மாண்டுக்கியஉபநிடதம் |
| கடஉபநிடதம் | ஐதரேயஉபநிடதம் |
| முண்டகஉபநிடதம் | பிருகதாரண்யஉபநிடதம் |
| கௌசிதகிஉபநிடதம் | சாந்தோக்யஉபநிடதம் |
| தைத்திரீயஉபநிடதம் | சுவேதாஸ்வதரஉபநிடதம் |

**இ. உபநிடதங்களில் பிரமம்**

- பிரமம் என்ற சொல் பிரஹ் என்ற அடியிலிருந்து தோன்றியது
  வளர்தல், பெருகுதல், பரவுதல் என பொருள்படும்
- பிரமத்திலிருந்து ஆன்மா தோன்றியது என்பதன் கருத்து பிரமம் தானாகவே இயங்குவது. அதாவது சிலந்தியானது தன்னிடமிருந்து நூலை உண்டாக்கி மீண்டும் அதை தன்னுள் இழுத்துக் கொள்வதைப்போல் இறைவனிடமிருந்து உலகம் படைக்கப்பட்டு விடுக்கப்படுகின்றது என முண்டகஉபநிடதம் குறிப்பிடுகிறது
- மண்ணிலிருந்து சட்டி பானை உருவாக்குவது போல பிரமத்திலிருந்து உலகப்பொருட்கள் அனைத்தும் மாற்றமடைந்து தோற்றம் பெற்றுள்ளது
- எதனால் இவ்வுலகம் தோன்றி எதனால் இயங்கி எதில் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம் என பிருகதாரண்யக உபநிடதம் கூறுகிறது
- எள்ளில் எண்ணெய் உள்ளடங்கியிருப்பது, தயிரில் நெய்யிருப்பது, விறகில் தீ இருப்பது போல பிரமதத்துவம் மறைந்துள்ளது என சுவேதாஸ்தரஉபநிடதம் கூறுகிறது
- பிரமத்திற்கு இரண்டு நிலைகள்
  சப்பிரபஞ்சநிலை- பிரபஞ்சத்தோடுபிரமம் கூடிய நிலை
  நிஷ்பிரபஞ்சநிலை- பிரமம் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட நிலை
- சுவேதகேது உத்தாலகர் விசாரணையில் பிரமத்தின் வியாபகம் விளக்கப்பட்டுள்ளது.

**ஈ. உபநிடதங்களில் ஆன்மா**

உடலின் இயக்கத்திற்கு காரணம் ஜீவாத்மாவாகும்
ஆன்மா ஒன்று அதுவே பரமாத்மா
உடலிலிருந்து உடலை இயக்கும் சக்தி

சிற்றறிவுடையதால் அபரவித்யா
ஐந்து கவசங்கள் கொண்டு பல சட உடம்பால் மூடப்பட்டுள்ளது
தீப்பொறியிலிருந்து பல சிறிய பொறிகள் உருவாகுவது போல பிரமம் பல ஜீவன்களாக தோன்றுகிறது
ஆன்மாவைக் கண்ணால் காணமுடியாது.
வண்டியிலே பூட்டிய குதிரைபோல உடலும் உயிரும்
அஞ்ஞானத்தில் மூழ்குவதால் அறியாமை தீவினை செய்து பிறவி எடுக்கின்றது.
தான் செய்த வினையை தானே அனுபவித்தல், நெற்கதிர் முற்றி மீண்டும் முளைப்பது
பிரமத்தை உணர்தல் உயர் ஞானம்-சிரவணம், மனனம், நித்தியாசனம்

3) **'வேதாந்த தத்துவ வளர்ச்சியில் விசிட்டாத்வைதம் தனித்துவம் மிக்கது' இக்கூற்றினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க**
**அ. விசிட்டாத்வைதம் என்பதன் பொருள்**
**ஆ. விசிட்டாத்வைத கோட்பாட்டின் சிறப்பம்சம்**
**இ. சங்கரர் கோட்பாடு விசிட்டாத்வைதக் கோட்பாட்டுடன் வேறுபடும் விதம்**
**ஈ. முத்தி**

**அ. விசிட்டாத்வைதம் என்பதன் பொருள்**

- இராமானுஜர் விசிட்ட +அத்வைத எள்ற விசேடனத்திற்கும் விசேடியத்திற்கும் இடையிலான தொடர்பை விசிட்டாத்வைதம்
- சங்கரரின் அத்வைத கொள்கையிலிருந்து வேறுபட்ட வேதாந்த மரபில் இராமானுஜரால் முன்வைக்கப்பட்ட மற்றுமொரு பரிமாணமாக அமைந்தது.
- விசேடமான விளக்கத்தை உடைய அத்வைதம் ஸ்ரீமந்நாராயணனையே பிரமமாகக் கொள்கிறது

**ஆ. விசிட்டாத்வைத கோட்பாட்டின் சிறப்பம்சம்**

- இராமானுஜர் பேசும் அத்வைதத்தில் உலகு, உயிர் பிரமத்திற்கு விசேடனம்
- முப்பொருள் உன்மை பேசும் தத்துவதிரயம் அசித், சித், ஈஸ்வரன்.
- இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு சரீர சரீரி சம்பந்தம்
- உயிர்கள் இறைவனது உடல் என்பதனை விளக்குகிறார்
- அப்பிரசித்திக்கொள்கை

**இ. சங்கரர் கோட்பாடு விசிட்டாத்வைதக் கோட்பாட்டுடன் வேறுபடும் விதம்**

| சங்கரர் | இராமானுஜர் |
|---|---|
| பிரமம் உலகமாவது மாயை | பரிணாமவாதக்கொள்கை |
| காரணபிரமம் உண்மை | உள்பொருள் மூன்று |
| காரியஉலகம் உண்மையல்ல | உலகு உயிர் இறைவனிடம் கொண்டுள்ள தொடர்பு |
| விவர்த்தவாதம் | பிரிக்கமுடியாதது, அப்பிரசித்தி |
| உள்பொருள் ஒன்று | பல ஆன்மா இறைவன் உடல்கள் |
| பரமான்மா ஒன்றே ஆன்மா இல்லை | இறைவன் அந்த உடல்களை இயக்கும் உயிரி |
| உலகம் உண்மையல்ல | பக்தி முக்கியத்துவம் |
| ஏகான்மா | |
| ஞானம் முக்கியத்துவம் | |

**ஈ. முத்தி**

- ஆன்மா பிறவித்துன்பத்திலிருந்து வைகுண்டத்தை அடைவது
- கர்ம,ஞான, பக்தி மார்க்கங்கள் துணை புரியும்
- பக்தியை விட மேலானது பிரபக்தி
- பலனை எதிர்பாராது கடமை செய்தல்
- கன்ம பலன்களின் அடிப்படையில் உடல் அழிந்தபின் வைகுண்டத்தை அடைவது

## பகுதி-II

**4) தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவபக்தி இயக்கத்தின் பிரதான அம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.**
**அ. அரசர்களின் பங்கும் பணியும்**
**ஆ. நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்**
**இ. திருக்கோயில் வழிபாடு**

**அ.அரசர்களின் பங்கும் பணியும்**

- பல்லவ மன்னர்கள் சைவ நெறியை தமது அரச நெறியுடன் இணைத்து சைவ பக்தி இயக்கத்திற்கு உறுதுணை புரிந்தனர்
- சைவ ஆலயங்களை அழிக்க முடியாத கருங்கற்களை கொண்டு உருவாக்கி சைவ பக்திக்கு உதவினர்
- பல்லவர் காலம் கி.பி575தொடக்கம் கி.பி.850 வரை
- இவர்களின் சமய சின்னமாகிய நந்தி சின்னமும் சிவனின் கட்டுவாங்க கொடியும் சைவபக்தி இயக்கத்தின் மீது கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகிறது
- மன்னர்கள் சைவ சமயத்தில் மாறினர். மக்களும் அவ்வழி ஈடுபட்டனர்
- வேதாகம மரபுகள் தமிழகத்தில் கலந்தன
- ஆலயங்களில் ஆகம மரபிலான வழிபாட்டு முறை
- மன்னர்களின் விருதுப்பெயர்கள்
- திருக்கோயில் நகரங்கள் உருவாகின
- அரண்மனையில் சமய சடங்குகள் மேலோங்கின
- அரண்மனை சடங்கு ஆலய சடங்காக மாற்றமடைந்தன
- நாயன்மார்களை போற்றினர் பணிகளை வியந்து பாராட்டினர்

**ஆ. நாயன்மார்கள் ஆற்றிய பணிகள்**

- சைவ சமய நாயன்மார்கள் நால்வரும் சைவ சமயத்திற்கு தலைமை தாங்கி, சைவ பக்தி இயக்கம் வளம் பெற செய்வதில் பெரும் பங்கு வகித்தனர்
- சைவ சமயத்தில் பல்வேறு விடயங்களான சிவனது பரத்துவம், சிவசின்னம் போற்றுதல், சைவ வாழ்வு, தூய்மை, இசை, சமூக நலன் என பல்வேறு அம்சங்களை குறிப்பிட்டு பதிகங்கள் பாடினர்
- சமூக மேம்பாட்டிலே வறுமை, பசிப்பிணி, நோய், இயற்கை இன்னல் என பல்வேறு விடயங்களை முன்வைத்து இறைவனைப் போற்றி இன்பம் பெற வைத்தனர்
- இறைவழிபாட்டில் நாயன்மார்கள் ஈடுபட்டவேளை ஒவ்வொருவரும் வெவ்வேறு உறவு முறைகளைக் கடைப்பிடித்தனர்
- இவர்களது அரிய பணிகளால் ஆலய வழிபாடும் சைவசாதனங்களாக பரிணமித்து பக்தி இயக்கம் வளம்பெற வைத்தது
- திருப்பதிகங்களை பண்ணுடன் பாடி மேலும் உரமூட்டினர் ‘பண்ணும் பதமேழும்…’ என சம்பந்தரும், ‘என்கடன் பணி செய்து கிடப்பதே…’ என அப்பரும் ‘பக்தரைப் பணிந்து அடியாருக்கும் அடியேன்…’ என சுந்தரரும் ‘ஞானத்திலும் ஞானமாய் சிவமாக்கி…’ என மாணிக்கவாசகரும் வாழ்ந்து பக்தி இயக்கத்தை வளர்த்துச் சென்றனர்
- அற்புதங்கள் மூலம் சமயப்பணி, சமூகப்பணி என மக்களையும் தமது பக்தி இயக்கத்தில் இணைத்தனர்
  தாம் இன்பம் பெறுவது மட்டுமன்றி மற்றவரையும் வழிப்படுத்தினர்

- பக்தி இயக்கத்திலே சமூக சமத்துவம் 'ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் கங்கை வார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்.......' எனப் பேணிப்போற்றினர் இவ்வாறு பக்தி இயக்கம் வரை பணிகள் ஆற்றினர்

**இ.திருக்கோவில் வழிபாடு**

- சைவ சமயத்தில் சைவ பக்தி இயக்கம் வளம்பெற திருக்கோவில் வழிபாடு, இறைவன் பெருமை, திருவுருவவர்ணனை, சிவசின்னங்களின் சிறப்பு, சைவ நாற்பாதங்களின் மகிமையும் சாதனையும், குருலிங்க சங்கம வழிபாட்டின் மகத்துவம் என்பன அமைந்தது.
- நாவுக்கரசர் 'திருக்கோயில் இல்லாத திருவிலூர்........ அடவி காடே' என முக்கியத்துவப் படுத்தியதற்கு அமைய மன்னர்கள் அழியாப்பொருள் கொண்டு ஆலயம் அமைத்தனர் வேதாகம முறைப்படி புரோகிதர்களை நியமித்து வடமொழிக் கல்வியை முக்கியத்துவப்படுத்தி பூசனை புரிந்தனர்.
- சம்பந்தர் 'பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்.....' எனவும் நாவுக்கரசர் 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்...' எனவும், 'தலையே நீ வணங்காய்......' எனவும், 'கண்காள் காண்மின்களோ....' எனவும் 'கை கால் கூப்பித் தொழீர்...,' 'கால்களால் பயன்என் கோலக் கோபுரக் கோகரணம் சூழா...' எனவும் போற்றியுள்ளனர்.
- திருக்கோவில் வழிபாட்டில் நமச்சிவாய என்ற நாமத்தை பெருமைப்படுத்தி சம்பந்தர் 'நாதன்நாமம் நமச்சிவாயவே..' நாவுக்கரசர் 'நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே' சுந்தரர்- 'அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே' மாணிக்கவாசகர் 'நமச்சிவாய வாழ்க..' என இவற்றை ஓதி வழிபடுவதால் பயன்பெறலாம் என தாமே ஒவ்வொரு திருக்கோவில்களாகச் சென்று வலம்வந்து பாடிக்காட்டி மக்களையும் மன்னரையும் வழிப்படுத்தினர்
- திருக்கோவில் வழிபாடு பல்லவர் கால பக்தி இயக்கத்தினை மேலும் வளம்படுத்தின இவ்வாறாக பல்லவர் காலத்தில் ஏராளமான திருக்கோவில்கள் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருமுறைத் தலங்களாக மிளிர்ந்தன எனவே திருக்கோவில் வழிபாடும் சிறப்பு பெற்றன
- சம்பந்தர், சுந்தரர் ஈழத்து சிவாலயங்களைக் கூட மானசீகமாக வழிபாடு ஆற்றி பதிகங்கள் பாடப்பட்டுள்ளமையும் சிறப்பானதாகும்.

5) **'இந்துசமய நெறிகளுள் சாக்தம் தனித்தவமான பண்பாட்டுச் சிறப்பு மிக்கதாகும்'. இக்கூற்றினை மேல்வரும் அடிப்படையில் எழுதுக.**
**அ. சாக்த வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி**
**ஆ. சாக்த வழிபாட்டு இலக்கியங்கள்**

**அ. சாக்த வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சி**

- ❖ சக்தியைப் பரம்பொருளாகக் கொள்ளும் நெறி
- ❖ சண்மதங்களில் ஒன்று சக்தி பரத்துவத்தை பகரும்
- ❖ சாக்தத்திற்கும் சைவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு
- ❖ தோற்றம்- சிந்துவெளி கால பெண் உருவங்கள் (சாந்தமுகம், கோரமுகம்)
    - ஒரு பெண்ணின் தொப்பூழில் இருந்து தோன்றும் செடி
    - தரையைப் பெண்ணாக வழிபட்டமை
    - வேத இலக்கியங்களில் உஷை, இராத்திரி, பிருதுவி பெண்ணாக வர்ணிக்கப்பட்டமை
    - இருக்குவேதத்தில் தேவிசூக்தம், துர்க்காசூக்தம், பூதேவிசூக்தம், ஸ்ரீசூக்தம் எனப்பல உண்டு
    - ஆரணியத்தில் உமா, துர்க்கை, காளி, சரஸ்வதி போற்றப்பட்டமை
    - உபநிடதத்தில் தேவி உபநிடதம்
- இதிகாசங்களிலே -இராமாயணத்திலே இராமன் இலங்கையைப் போர் செய்ய முன் துர்க்கை

பூசைசெய்தான் -துர்க்கை தோத்திரப்பாடல்கள்
-மகாபாரதத்தில் கண்ணன் கார்த்தியாயினியையும், அர்ச்சுனன் துர்க்கையையும் போருக்குப் புறப்படும் முன் வழிபட்டனர்.

- புராணங்களில் - மார்க்கண்டேய புராணத்தில் மகிஷாசுரமர்த்தினி நாமங்கள், இரணியவம்சத்தில் அரக்கர்களை அழிக்க தேவி கௌசிகி சக்தியை வெளிப்படுத்தியது.
- ஸ்கந்தபுராணத்தில் அம்பிகையின் நாமங்கள், பலவடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- தமிழ்இலக்கியங்களில் -சங்கஇலக்கியங்களில் கொற்றவை வழிபாடு, சிலப்பதிகாரத்தில் மகாலட்சுமி, துர்க்கை வழிபாடு, மணிமேகலையில் மகாசரஸ்வதி, காளி பிங்கலநிகண்டில் சக்தியின் 38 திருநாமங்கள் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பல்1வேறு வளர்ச்சி ஆதிசங்கரரின் சௌந்தர்யலகரி, தேவாரப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் எனப்பலவும் சாக்த நெறியின் வளர்ச்சியாக உலகிலே பல இடங்களிலும் புராதனமிக்க அருளாட்சி பொருந்திய சக்தி ஆலயங்கள் அமைந்துள்ளமை கண்கூடாகக்காணமுடிகிறது.

**ஆ. சாக்த வழிபாட்டு இலக்கியங்கள்**

- வடமொழி இலக்கியங்கள் இருக்குவேத சூக்தங்கள்
  -சாக்ததந்திரங்கள்-77
  மகாநிர்வாணதந்திரம், திரிபுரரகசியம், சதுமதிகுலார்ணவம், காமகலாவிலாசம், தந்திராலோகம், பிரபஞ்சசாரம், ஸ்ரீநேத்ரதந்திரம், சூலசூடாமணி, ஸ்ரீவித்யாரணவம், சாரதாதிலகம், ஞானார்ணவம்
  - கேன,சுவேதாஸ்வரத தேவி உபநிடதங்கள்
  - மார்க்கண்டேய புராணத்தில் -தேவிமகாத்மியம்
    இது 13 அத்தியாயங்களையும் 700 சுலோகம் கொண்ட மிகச்சிறந்த பாராயணநூல்
  - பிரமாண்டபுராணத்தில் - லலிதா சகஸ்ரநாமதோத்திரம்
  - சாக்த உபபுராணங்கள் -தேவிபுராணம் சண்டிகாபுராணம், தேவிபாகவதபகவதி
  - மகாபாரதத்தில் துர்க்காதோத்திரம்
  - ஆதிசங்கரரின் கனகதாராஸ்தோத்திரம், சௌந்தர்யலகரி, பவானிஅஷ்டகம், அஷ்டலக்சுமி ஸ்லோகம்
- தமிழ்மொழி இலக்கியங்கள்
  - குமரகுருபரர் - சகலகலாவல்லிமாலை மீனாட்சிபிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மைகுறள், மீனாட்சிஅம்மன் இரட்டைமணிமாலை, சிவகாமியம்மை இரட்டைமணிமாலை,
  - அபிராமிப்பட்டரின்- அபிராமிஅந்தாதி, அபிராமிஅம்மைப்பதிகம்
  - கம்பர் -சரஸ்வதி அந்தாதி, சக்திப்பாடல்கள்
  - நீலகண்டதீட்சிதர்- ஆனந்தசாகரஸ்தவம்

எனப்பல இன்னும் சக்திக்குரிய பராயணம் செய்து வழிபடும் இலக்கியங்களாக உள்ளன.

**6) இந்து ஒருவனின் உடல், உள மேம்பாட்டிற்கு யோகதத்துவம் சிறப்பாக துணைபுரியுமாற்றினை ஆராய்க.**

யோக தத்துவம் மன இயக்கத்தினை ஒடுக்குவதே யோகம்

- ஆறு இந்து தரிசனங்களில் ஒன்று மிக முக்கியமானது
- பொருள் பிரகிருதியிடமிருந்து பிரிதல் இறைவனிடம் இணைதல்
- பிரமாண நூல் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம்
- மேலும் உபநிடதம், பகவத்கீதை, திருமந்திரம், ஆகமம் உள்ளது
- சாங்கிய தரிசனம் ஏற்றுக்கொண்ட பிரகிருதி, புருடன் பற்றிய கருத்தியல் ஏற்றுக்கொள்வதுடன் சாங்கியம் ஏற்காத இறைகோட்பாட்டை ஏற்கின்றமை சிறப்பு
- யோகம் எட்டு அங்கங்களைப் போதிக்கும் உடல், உள மேம்பாட்டிக்கான சாதனை நெறி இதனை பதஞ்சலி, திருமூலர் தெளிவுபடுத்துகின்றனர்
- இறைகோட்பாட்டை யோகம் ஏற்றுக்கொள்வதால் யோகம் ஈஸ்வர சாங்கியம், சேஸ்வர சாங்கியம் என்ற சிறப்பு பெயர்

- பதஞ்சலி முனிவர் யோகம் பற்றிய நான்கு பிராதான விடயங்களாக சமாதி, சாதனம், விபூதி, கைவல்யம் என்பவற்றை குறிப்பிடுகின்றார்
- சாங்கியம் கூறும் பிரகிருதி தத்துவம் புருட தத்துவம் என்பவற்றை யோகமும் குறிப்பிட்டாலும் சிறப்பாக யோகம் புருடனுக்கு ஏற்பட்டுள்ள அறியாமை பிரகிருதியின் தொடர்பாலே ஏற்பட்டதாகும்
- இத்தகைய உறவு மாயை தோற்றமாகும் இது அற்ற புருடன் தனது சுயாதீன நிலையை உணர்வது கைவல்யம் என குறிப்பிடுவது சிறப்பு
- கைவல்ய நிலை என்பது கேவல நிலை என்னும் சொல்லில் இருந்து தோன்றியதாகும் எனவே கேவல நிலை என்பது தனித்திருத்தல் எனப்பொருள் அதாவது புருடன் காம குரோத மோகம்.... என்னும் உணர்வுகளில் இருந்து விடுபட்டு தனித்திருத்தல்
- மண இயக்கங்களை தடுக்கும் நோக்கில் அட்டாங்க யோகம் பயிற்சியாக ஒருவனின் உடல், உள மேம்பாட்டிற்கு அமையும்
- யோகப் பயிற்சிகளில்
  இயமம்-தீய செயல்களை தவிர்த்தல்
  நியமம்- ஒழுக்க விதிகளைக் கடைப்படித்தல் இவை அறிவியல் வாழ்வினை வரையறை செய்வன
- அகிம்சை சத்தியம் களவு செய்யாமை.......ஆகிய நற்பண்புகளையும் தூய்மை, மனத் திருப்தி, இறைபக்தி, கல்வியில் ஈடுபாடு முதலான செயல்களையும் ஆக்கவல்லது
  ஆசனம்-இருத்தல் அதாவது உடலை தியானத்திற்கான வழியில் தயார்ப்படுத்தல்
  பிராணாயாமம்-மூச்சைப் பயிற்றுவிக்கும் பயிற்சி
  பிரத்தியாகாரம்- புலனடக்கம், இவை உடலையும் உடல் ஆற்றலையும் புலன்களையும் பயிற்றுவிக்கும் சாதனை நெறியாகும்
  தாரணை-மன அடக்கம், குறித்த விடயத்தில் மனதை பதித்தல்
  தியானம்-சிந்தனையில் ஆழ்ந்து ஈடுபடுதல், சிந்தையில் வியாபித்தல்
  சமாதி-தியானத்திலே நிலைபெற்று இருத்தல் என இந்நிலை விரிவடையும் இம்மூன்றும் மனதை கட்டுப்படுத்தி ஒரே சிந்தனையில் இருத்தல் சமாதி இந்த நிலையே யோகசூத்திரம் குறிப்பிடும் கைவல்யம் ஆகும்
- பிரபஞ்சத்திலே பல்லியல்புடைய ஆன்மாக்கள் ஆயினும் தனித்தன்மை உடையனவாகக் காணப்படுவன யோகதத்துவ செயற்பாடு ஆகும்
- எனவே யோகதத்துவம் சாதனை நெறியாக சமுதாய அறப்பண்புகளை வளர்த்து உடல், உளப் பயிற்சிகளை வழங்கி இந்து ஒவ்வொருவரினதும் உடல், உள மேம்பாட்டிற்கு துணை புரியும் நெறியாக, தத்துவமாக காணப்படுகின்றது.

7) **ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் திருக்கோணேச்சர ஆலய சிறப்புப்பற்றி கட்டுரை வரைக.**

- புராதன சிவாலயங்களுள் ஒன்று
- இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் கடலினுள்ளே உயர்ந்து நிற்கும் குன்றில் அமைந்துள்ளது.
- ஆலயவரலாறு - இராமாயணத்துடன் இராவணனுடன் தொடர்புடைய ஆலயம் கடலில் மூழ்கியது . இராவணன் வெட்டு
- புதிய ஆலயம் அமைத்தமை , அன்னியரால் அழிக்கப்பட்டமை
- இறைவன்-கோணேச்சரநாதர்
  இறைவி- மாதுமையம்மை
  தீர்த்தம்-பாவநாசம்
  தலவிருட்சம்- கல்லாலமரம்
- மறுபெயர்கள்- தென்கைலாயம், திரிகூடம், தட்சணகைலாயம், திருமலை, திருகுணாமலை, மச்சேஸ்வரம்
- பூசை விபரம் -தினமும் ஆறுகாலம் , மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேறி 18 நாட்கள் திருவிழா, சிவராத்திரி, நவராத்திரி, மார்கழித்திருவாதிரை

- தலச்சிறப்பு - சம்பந்தர் தேவாரப்பதிகம், அருணகிரிநாதர் திருப்புகழ் இனமதபேதமின்றிய வழிபாடு
- வரலாறு கூறும் நூல்கள்- மட்டக்களப்பு மான்மியம், கோணாசலபுராணம், தட்சணகைலாயபுராணம், மச்சபுராணம், கோட்டைவாயில் கல்வெட்டு, கோணேஸ்வரர் அகவல், அந்தாதி

**8) இந்துசமய வளர்ச்சியில் இசைக்கலை, பண்ணிசைக்கலை பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.**

- இசைக்கலை, பண்ணிசைக்கலை, இந்துசமய வளர்ச்சியில் மிக உன்னதமானது
- திருக்கோவில்களில் வளர்க்கப்படும் கலைகளுள் ஒன்று
- இறைவனே இசைவடிவானவன்- நாதப்பிரம்மம்
- இசை செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு ஐம்புலன்களை கட்டுப்படுத்தி உள்ளத்தைப் பண்படுத்தி பேரின்ப பேற்றினை தரவல்லது
- இசைக்கலை தோற்றம் வேதங்களிலே சிறப்பாக சாமவேதம் இசைக்கு வித்திட்டது
- புராணங்களில் இறைவடிவம் இசைக்கருவி
  சரஸ்வதி-வீணை சிவன்-உடுக்கு
  நாரதர்-தம்புரா கண்ணன்-புல்லாங்குழல்
  திருமால்,துர்க்கை-சங்கு திருநந்திதேவர்- மத்தளம்
- இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன் தான் இசை மீட்டி வரம் பெற்றான்.
- சங்ககாலத்தில் மக்கள் வாழ்வுடன் இசை இரண்டறக் கலந்துள்ளது.
  ஐவகை நிலங்களுக்கும் ஐவகைப்பண், பண்ணிசைப்போர் பாணர்
  யாழ் சிறந்த இசைக்கருவி என சிலப்பதிகாரத்திலுள்ளது.
  தமிழரின் செந்நெறி சங்கீதம்
- காரைக்காலம்மையார், முதல்மூன்றாழ்வார் பக்திப்பாசுரங்கள் இறைவனுடன் இசைவிக்கப்படுவது
- பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் பண்ணிசை வளர்த்தனர், தமிழரின் பாரம்பரிய இசை பண் என்பது கர்நாடகத்தில் இசை
- தேவார திருமுறைப்பாடல்களில் 23 பண்கள் பேசப்படுகின்றன.
  பண்ணும் பதமேழும்.... சம்பந்தர்
  ஓசை ஒலியெலாம்..... அப்பர்
  ஏழிசையாய் இசைப்பயனாய்...சுந்தரர்
  பண்சுமந்த பாடல் பரிசு..... மணிவாசர்
- பல்லவமன்னர்களில் இசையில் சிறந்தவர்-மகேந்திரவர்மன், சங்கீர்ணஜாதி பரிவாதினி என்னும் வீணை வாசிப்பதில் வல்லவன்
- இராஜசிம்மன் வீணாதரன், வாத்தியவித்யாதரன்
- சோழமன்னர் இசைமண்டபங்கள், இசைச்சிற்பங்கள் ஆலயங்களில் அமைத்தனர்.
- முதலாம் இராஜராஜசோழன் திருமுறைப்பாடல்களை பண்ணுடன் ஓதும் வழக்கம்
- இசைக்கலைஞருக்கு வாச்சியமாராயன் பட்டம், நிலபுலங்கள் வழங்கப்பட்டமை
- ஓதுவார் நியமனம் அவர்களைக் கண்காணிக்க தேவாரநாயகம் நியமனம்
- நாயக்கர் காலத்தில் இசைப்பெரியார்களின் தோற்றம், இசைக்கலை மேலும் முக்கியம் பக்தி இலக்கியங்கள் இசை வளர்த்தன- அருணகிரிநாதரின் சந்தஇசை
- இசைக்கலை பல்வேறு பரிணாமம் பெற்று பாடசாலைகள், கலைக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களில் முக்கியத்துவம்.
- மனிதவாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை இசை சிறப்பிடம், பண்பாட்டுக் கருவூலமான ஆலயங்களில் இசை, பண்ணிசை முக்கிய இடம் பெற்றமை.